முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,

திருவண்ணாமலை மாவட்டம்.

அசல் வழக்கு எண். 146/2021

**22.07.2024**

வா.சா. 2 ராஜேந்திரன்

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை -

நான் எஸ்எஸ்எல்சி படித்துள்ளேன். சாட்சி சொல்ல அழைப்பாணை வரவில்லை. வாதி பெருமாளை தெரியும். வாதி நில அளவில் உள்ள வித்தியாசம் காரணமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி பெருமாள் என் சித்தப்பா கரியனின் மூத்த மகள் ராணியின் கணவர் என்ற வகையில் என் மாமா. கரிய கவுண்டர் என் சித்தப்பா. 20.06.1968ல் கோவிந்தசாமி மற்றும் பலருக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை விவரம் எனக்கு தெரியும். கரிய கவுண்டருக்கு தங்கவேல், சுப்பராயன், வெள்ளை ஆகியோர் உடன்பிறந்தவர்கள். மேற்படி 4 சகோதரர்களும் தனித்தனியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல, தங்கவேலும், வெள்ளையும் அப்போது இறந்துவிட்டதால் வெள்ளையின் மூத்த மகன் கோவிந்தசாமி, தங்கவேலுவின் மூத்த மகன் ஏழுமலை, சுப்பராயன் மற்றும் கரியன் ஆகியோர் பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள். 20.06.1968 அன்று கோவிந்தசாமி மற்றும் சிலருக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை பொய் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினையில் கரிய கவுண்டருக்கு தாவா சொத்தின் எந்த பகுதி பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் தாவா சொத்து கரியனின் சுயார்ஜித சொத்து. கரியனுக்கு ராணி, ஜானகி என்ற மகள்கள் வாரிசுகள். கரியன் ராணியின் கணவர் பெருமாளுக்குத்தான் உயில் மூலம் சொதுதுக்களை எழுதி வைத்தார் என்றாலும் ஜானகிக்கு சொத்துக்கள் எதுவும் எழுதி வைக்கவில்லை என்றாலும் சரிதான், கரியனுக்கு ஆண் வாரிசு இல்லாததால் தன் வீட்டிலிலேயே வாழ்ந்து வந்த தன் மருமகனும் மைத்துனருமாகிய பெருமாள் பேரில் உயில் எழுதி வைத்தார். கரியன் 17.08.1983ம் தேதி உயில் எழுதி வைத்தார். எந்த சொத்து என்றால் 20.06.1968 தேதியிட்ட பாகப்பிரிவினையின் படி தனக்கு வந்த டி செட்யுல் சொத்தையும் சுயார் ஜிதமாக கிரயம் பெற்ற தாவா சொத்தையும் கரியன் உயில் எழுதி வைத்தார். 20.06.1968 தேதியிட்ட பாகப்பிரிவினையின் டி செட்யுல் சொத்தை கரியன் அனுபவித்தது இல்லை என்றால் சரியல்ல. தாவா ஏ செட்யுல் சொத்தை கரியன் அனுபவித்தது இல்லை என்றால் சரியல்ல. தாவா ஏ செ சட்யுல் சொத்தில் கிணறு உள்ளது, கரியன் அதில் கடலை, நெல், கேழ்வரகு பயிர் செய்தும், மாமரம், கொய்யாமரம், சப்போட்டா ஆகியவற்றை வளர்த்தும் அனுபவித்தார். மேற்படி கிணற்றிற்கு மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது, எப்போது என்று தெரியாது. மேற்படி கிணறு கூட்டுரிமை கிணறு என்றால் சரிதான். பிரதிவாதிகளின் தந்தை கண்ணன் தெரியும், அவருடைய தாவா சி செட்யுல் சொத்தும் தெரியும். கண்ணன் தன் நிலத்தில் நெல், கடலை ஆகியவை பயிர் செய்தார். மேற்படி விவசாயம் செய்ய மின் இணைப்பு தேவை என்றால் மின் இணைப்பு பெறுவதற்கு முன்பு கவளை மூலம் தண்ணீர் இறைத்தார்கள். கவளை மூலம் தண்ணீர் பாய்ச்சுவதற்கு கால்வாய் அவசியம் என்றாலும், மின் மோட்டருக்கு கால்வாய் அவசியம் இல்லை என்றாலும் சரிதான். மின் இணைப்பு தாவா ஏ செட்யுல் சொத்திற்கு பெருமாள் வாங்கினாரா, சி செட்யுல் சொத்திற்கு கண்ணன் வாங்கினாரா என்று தெரியுமா என்றால் இருவரும மின் இணைப்பு பெற்றுள்ளார்கள், எப்போது என்று தெரியாது. சுமார் 20 வருடத்திற்கு முன்பு கரியனின் நிலத்திற்கும், கண்ணனின் நிலத்திற்கும் இடையே

வரப்பு இருந்தது என்றால் வரப்பும் அதோடு ஒட்டிய கால்வாயும் இருந்தது. கண்ணனின் நிலத்திற்கு நீர் பாய்ச்சுவதற்கு மேற்படி கால்வாய்க்கு அடியில் சிமெண்ட் பைப் புதைக்கப்பட்டு இருந்தது. சுமார் 30 வருடமாக மேற்படி பைப் உள்ளது. அவ்வாறு நான் சொல்வது பொய் என்றாலும் மேற்டபடி பைப் 60, 70 வருடமாக உள்ளது என்றாலும் சரியல்ல. மேற்டபடி பைப் புதைத்தது கண்ணன் என்று எனக்கு நன்கு தெரியும். மேற்படி பைப்பின் மேல் பக்கம் கண்ணனீன் நிலமும் கீழ் பக்கம் வாதியின் நிலமும் உள்ளன. மேற்படி சிமெண்ட் பைப்பின் விட்டம் 20 செ.மீ, நீளம் சுமார் 50 மீட்டர் இருக்கும். அதன் காரணமாக சிமெண்ட் பைப்பை முழுவதும் நிலத்திற்குள் புதைக்க முடியாது என்றால் சரியல்ல. மேற்படி சிமெண்ட் பைப் பார்த்தாலே கண்கூடாக தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி பைப் கண்ணன் மற்றும் வாதியின் நிலத்திற்கு நடுவே உள்ள வரப்பை ஒட்டிதான் புதைக்கப்பட்டு உள்ளது என்றால் வரப்பை ஒட்டியுள்ள கால்வாயில் புதைக்கப்பட்டுள்ளது. தாவா ஏ செட்யுல் சொத்தை ஒட்டி பிரதிவாதிகள் சிறுது சிறிதாக வரப்பை வெட்டி ஆக்கிரமித்துக் கொண்டதாக என் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் சொல்வது பொய் என்றாலும் தாவா சி செட்யுல் சொத்தை ஒட்டி சிமெண்ட் பைப் இருப்பதால் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சி செட்யுல் சொத்தில் பயிர் செய்வதற்காக முதல் முதலாக பம்பு செட் வாங்கியது கண்ணன்தான் என்றால் தெரியாது. கண்ணன் மேற்படி சிமெண்ட் பைப்பில் மாற்றம் ஏதாவது செய்தாரா என்றால் தற்போது வரை எனக்கு தெரியாது. நான் ராணிப்பேட்டை பெல் நிறுவனத்தில் பணி செய்து ஓய்வு பெற்றேன். தாவா ஏ மற்றும் சி செட்யுல் சொத்துக்களை நான் பார்த்ததே இல்லை என்றாலும், வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. கண்ணனின் தாவா சி செட்யுல் சொத்தின் சர்வே எண் 20/9, 0.54.50 ஹெக்டேர்ஸ். கண்ணனுக்கு பாத்தியப்பட்ட தாவா சி செட்யுல் சொத்தின் வேறு சர்வே எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான், பிரச்சனைக்குரிய இடத்தின் சர்வே எண் மட்டும்தான் தெரியும். தாவா சி செட்யுல் சொத்து வேறு பேரில் மாறிவிட்டதா என்று தெரியுமா என்றால் தற்போதுவரை கண்ணனின் பெயரில்தான் உள்ளது. தாவா ஏ செட்யுல் மற்றும் சி செட்யுல் சொத்திற்கு நடுவே உள்ள கண்ணனின் சிமெண்ட் பைப்பை ஒட்டி வரப்பு உள்ளதா அல்லது ஏ செட்யுல் சொத்தை நோக்கி வரப்பு தள்ளி உள்ளதா என்றால் சிமெண்ட் பைப் இருப்பதே தாவா ஏ செட்யுல் சொத்தில்தான். அவ்வாறு நான் சொல்வது தவறு என்றாலும் சிமெண்ட் பைப் தாவா சி செட்டயுல் சொத்தில்தான் அமைந்துள்ளது என்றாலும் ஏ செட்யுல் சொத்தில் அமைந்திருந்தால் வாதி முன்பே ஆட்சேபணை செய்திருப்பார் என்றாலும் சரியல்ல. மேற்படி சிமெண்ட் பைப் கரிய கவுண்டர் அனுபவிப்பதற்கு முன்பே புதைக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா ஏ செட்யுல் சொத்தின் வடக்கே கிணறு, கிழக்கே நெடுமாறம் நிலம், தெற்கே ஏரிக்கறை, மேற்கே கண்ணன் நிலம். வடக்கே உள்ள கிணறு கூட்டுரிமை கிணறு. வடக்கே பிரதிவாதிகள் மற்றும் உஷா, அம்பிகா ஆகியோர்கள் நிலங்கள்தான் உள்ளன என்றாலும் மேற்கேதான் கிணறு உள்ளது என்றாலும் சரியல்ல. ஜக்பந்தி தெரியாமல் வாதிக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சி செட்யுல் சொத்தின் ஜக்பந்தி தெரியாது.

**மறுவிசாரணை**

இல்லை.